உ

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

102

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை குருநிலம், மாம்பாக்கம்; விசய, ஆவணி; 4—9—53 தளிர்—49

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## தீமை தேய்வது எப்படி?

நிகழ்காலத்திலும் மக்கள் தீமைகள் செய்வதுண்டு; கடந்த காலத்திலும் செய்திருக்கக் கூடும்.

கடந்த காலத்தில் செய்த தீமைகள் நிகழ்காலத்திலும் எதிர் காலத்திலும் தம் பயனாகிய துன்பங்களை உண்டாக்கும்; நிகழ் காலத்தில் செய்யும் தீமைகளும் எதிர்காலத்தில் தம் துன்பப் பயனை விளைக்கும். வினைப் பயன் உண்டாதல் திண்ணம்; தப்புதல் இயலாது.

தப்ப இயலாது என்பதில் உறுதியான தெளிவு பலர்க்கு இருப்பதில்லை. அப்படி இல்லாததனால், 'அதை யார் கண்டார்கள்' என்னும் முரட்டுத் துணிவுடன், நிகழ்காலத்தில் தீமைகள் பலவற்றைச் செய்து விடுகின்றார்கள். 'பின்னால் நடக்கப் போவதை அப்போது பார்த்துக் கொள்ளலாம்' என்பதும் அவர்கள் கருத்தாயிருக்கின்றது.

தீர்ந்த தெளிவும் அதில் நன்னம்பிக்கையும் விழிப்புற் ஆற்றலும் இல்லாததுதான் இவ்வளவுக்குங் காரணம்! உலகக் குழப்பத்துக்கே இவை காரணம்!

இனித், தெளிவு முதலியன இருந்தாலும், நிகழ்காலத்தில் நடந்துகொள்ளும் வழிவகைகள் தெரிய வேண்டுமல்லவா? ஆசிரியர் திருவள்ளுவர் அதற்கு வழி காட்டுகின்றார்.

செய்த தீமைகள் பாவங்களாய் வினை கொள்ளுகின்றன. பாவங்கள் குறைய வேண்டுமானால், தீமைகளுக்கு எதிரான நன்மைகளைச் செய்யவேண்டும்; செய்யுற் நன்மைகள் புண்ணியங்களாய் உருக்கொள்கின்றன. நற்செயல்கள் செய்யச் செய்யப் புண்ணியம் வளர்ந்து ஆற்றல் கொள்ளும். இப் புண்ணியமாகிய அறத்துக்குமுன் பாவமாகிய மறம் தன் வலிமடங்கி அழிந்துவிடும். பாவங்கள் தேய்வதற்கு இயற்கையான வழி இது!

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

அல்லவை தேய அறம்பெருகும், நல்லவை
நாடி இனிய சொலின்.

நல்லவை நாடி—கருத்தால் நன்மை பயக்குஞ் சொற்களைத் தெரிந்து, இனிய சொலின்—அவற்றை இன்சொல்லாகச் சொன்னால், அல்லவை தேய அறம் பெருகும்—பாவங்கள் தேய்ந்தொழியப் புண்ணியங்கள் மிகுந்துவரும்.

அல்லவை—அறம் அல்லாதவை; அதாவது பாவங்கள். நல்லவை சொல்லுதலால் அறம் வளர்தலின், அறத்தின் முன் வலிகெட்டுப் பாவங்கள் தேய்ந்து போகின்றன. "தவத்தின் முன் நில்லாதாம் பாவம்" என்றார் நாலடியாரிலும்.

இனியவாகச் சொல்லின் என்றதனால், நல்லவை என்பது கருத்தால் நல்லவற்றை உணர்த்திற்று. எனவே, சொல்லால் இனியனவும் கருத்தால் நல்லனவுமான இன்சொற்களால் வாழ்க்கையில் அறம் பெருகி அல்லவை தேயும் என்றார். அல்லவை தேயவும் சொல்லும்பொருளும் இனியவாதல் வேண்டும், அறம் பெருகவும் அவ்விரண்டும் இனியவாதல் வேண்டும் என்க.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | விசய, ஆவணி, | தளிர் |
|---|---|---|
| 5 | 4-9-53 வெள்ளி | 49 |


## சேரிப் பிரிப்பும் கூட்டு நாட்டமைப்பும்

### (Apartheid and the U. N. O)

தென்னாப்பிரிக்க முதலமைச்சர் Dr. மலான் வெள்ளையருக்கும் அல்லாதார்க்கும் தனித் தனியே சேரிகளை அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். மக்களை நிறங் காரணமாகப் பிரிப்பது இருபாலார்க்கும் தீங்குண்டாக்குவதோடு உலக அமைதிக்கே கேடு செய்யுமென்று முற்போக்குடைய பெருமக்கள் கலக்க முறுகின்றனர். கூட்டு நாட்டமைப்பின் ஒரு குழு இதைப்பற்றி ஆராய்ந்து வருகிறது.

ஜெனீவாவில் அக் குழுவினர்க்குத் தென்னாப்பிரிக்க ஆட்சியைப் பற்றியும் சேரிப் பிரிப்பினைப் பற்றியும், அறிஞர் சிலர் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். அவற்றுள் கறுப்பர்களின் நிலைமையைக் காட்டும் சில பின்வருமாறு:

'வெள்ளையரல்லாதார்க்கு வாக்குரிமை இல்லை. அவர்களுக்கு மன்றங்களில் நீதி வழங்கப்படுவதில்லை. உயர்தர மன்றங்களுக்குச் செல்ல மிக அருமையாகவே இசைவு தரப்படுகிறது. 'நாட்டுத் தொழிலாளர் மசோதா'வின்படி கறுப்புத் தொழிலாளரின் மறியல் உரிமை மறுக்கப் படுகிறது.

வெள்ளையர் குழந்தைகளுக்கு 7 வது ஆண்டிலிருந்து கட்டாயக் கல்வியுண்டு. கறுப்புக் குழந்தைகளுக்கு அது இல்லை. இவர்களுக்குப் பள்ளிகள் வேண்டுமானால் இவர்களே பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொண்டு வேண்டிய கருவிகளைச் சேர்த்து, ஆசிரியர்களை அமர்த்தி, நடத்திக் கொள்ளவேண்டும். அதன் பின்னரே ஆட்சியின் உதவி கிடைக்கும். நெட்டாளத்தில் 12,000 இந்தியச் சிறுவர்களுக்கு 26 பள்ளிகள் மட்டுமே உள்ளன.

வெள்ளையரல்லாதார்க்கு மருத்துவ உதவி இல்லை. காசநோயால் மட்டும் ஆண்டுக்கு 20,000 மக்கள் இறக்கின்றனர். இதில் வெள்ளையரின் தொகை 450; மற்றவர் தொகை 19,550!

டர்பனில் உள்ள இந்தியரில் 70 விழுக்காட்டினர் ஏழைகளென்று கூறுவதற்கும் சிறிது குறைந்த நிலையில் உள்ளனர். தொழில் துறையில் கறுப்பரின் போட்டி வாராதபடி [illegible] யைக் காக்க வேண்டுமென்பது அவர்கள் நோக்கமாகும்'

அன்றியும் சில ஊர்களில் கறுப்பர்கள் சேர்க்கப்படுவதில்லை. 'ஸ்டெல்லென்பாக்' என்னும் ஊரில் முதலாளிகளின் (வெள்ளையர்) இசைவுச் சீட்டின்றி இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரை யாரும் வெளியே அனுப்பப்படுவதில்லை.

புகை வண்டிகளிலும், உந்து வண்டிகளிலும், நூல் நிலையங்களிலுங்கூடப் பிரிவினை செய்து வைக்கப்பட்டுள்ளது.

நிறத்தின் காரணமாக ஒரு சாராரை இவ்வாறு இழிவு படுத்தி ஒடுக்கி வரும் கொடிய செயலை ஆட்சியாளர், உள்நாட்டைச் சேர்ந்த தென்று[illegible], இதில் கூட்டுநாட்டமைப்புக் குழுவினர் தலையிடுவதற்கில்லை என்றும் கூறுவது அவர்களின் தற்போக்கைக் காட்டுகின்றது. மனித உரிமையைக் காக்கும் கடமையை மேற்கொண்டுள்ள கூட்டுநாட்டமைப்பு இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருத்தற்கில்லை. கொரியாவில் நடந்த போரில் பொதுவுடைமையர் வலியத் தாக்கினர் என்று கூறி அதைத் தடுக்க எவ்வளவு ஊக்கத்தோடு செயல் தொடங்கிற்றோ அவ்வாறே தென்னாப்பிரிக்கக் கறுப்பர்களின அடிப்படை உரிமையைக் காக்கவும் செயல் தொடங்கவேண்டும். அறிஞர்கள் எதிர்பார்க்கும் கலவரங்கள் எவையும் நிகழா முன்னமே அடக்கு முறையையும், சேரிப் பிரிப்பையும் தடுக்கவேண்டும். தடுத்த பின்னரே, இவ்வமைப்பு, உலக அமைதியையும் மனித உரிமையையும் காக்க மேலும் வலுப்பெற வேண்டும் என்னும் கொள்கை நிலை நிறுத் [illegible]தப்ப[illegible].

—மெய்கண்டான்.

# மொழித் துறை

## * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு. கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.

(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

(முன் தொடர்ச்சி)

### அதிகாரம் 4.

### பா இன்பம்

அஃதாவது, பாட்டில் அமைந்த கருத்து முதலியவற்றால் தோன்றும் சுவை நலம் கூறுதல்; இது பா நலத்தால் விளையும் இன்பமாதலின் அதனை அடுத்து வைக்கப்பட்டது.

1. உண்ணச் சுவை தெவிட்டா
 துள்ளுந்தோ றூறுந்தேன்
 உண்டுகொல் பாவிற் பிற?

நுகர நுகரச் சுவை தெவிட்டாமல் எண்ணுந்தொறும் ஊறி இனிக்குந் தேன், பாட்டைப் போல் வேறு உண்டோ?

உண்ண வென்பது, பயில்வுப் பொருள்மேல் வரும் அடுக்குக் குறிப்புடையது. தெவிட்டாது ஊறுமெனவுந் தொடர்க; ஊறுமென்றது ஊறியினிக்கும் என்னும் பொருட்டு. ஈண்டுப் பாட்டுத், தேன் என்னும் உருவகத்தினின்றது. 'பிற' சாதிப்பன்மை. இதனாற், பாட்டின் இன்பங் கூறப்பட்டது,

2. அழகுக் கழகளிக்கும்
 ஆருயிர்க் கின்பம்
 பழுத்துதிரும் பாவென் பழம்.

பாவலன் மாட்டுப் பழுத்துதிரும் பாட்டென்னும் பழம், அழகுக்கு மேலும் ஓர் அழகு தரும்; அருமை மாந்தர்க்கு ஓர் இன்பப் பொருளுமாம்.

இயற்கைப் பொருளின் அழகு பாவலன் பாட்டாற் பின்னும் அழகாக்கப்படுதலின் 'அழகுக் கழகளிக்கும்' என்றார். ஆருயிர் என்றது மக்கண்மேல் நின்றது. பாட்டினை நுகர்வோராவாகலின், அவர்கட்கு அருமை, ஆற்றலுடைமையும் அகமுற்பேறுடைமையும். இன்பம் ஆகுபெயர்; சிறப்பும்மையும் ஆக்கமும் விகாரத்தாற் றொக்கன. கனிந்தெழும் இயல்பினவாதலின், 'பழுத்துதிரும்' என்றார்.

3. கட்டிய பாவேறு
 கனிந்தெழுந்த பாவேறு
 கல்லுங் கனியு மது.

அறிவு முயற்சியாற் றொடுத்தமைத்த பாட்டு வேறு; உணர்ச்சி மிகுதியால் இயல்பாகக் கனிந்தெழுந்த பாட்டு வேறு. பின்னதனாற் கல்லுங் கனியும்.

சில சொற்கள் வருவித்துக் கொள்க. கனிந்தெழுதல் கல்லுங் கனிதற்குக்காரணமாயிற்று. அது, அதனால்; பின்னதனுவென்க. கனிந்தெழுந்த பாவின் சுட்டு; மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது.

இவை இரண்டு பாட்டானும் பாட்டு இன்பப் படக்குங் காரணங் கூறப்பட்டது.

4. பற்றித் தருந்துன்பப்
 பாயாண்டுப் பெற்றதோ
 இன்பம் பயக்கும் இயல்.

உயிருணர்வைப் பிணித்து அதற்குத் தன்மாட்டேகக் கருந் துன்பவியல்பை யுடைய பா, அதற்கு மறுதலையாக இன்பமும் பயக்கும் இயல்பை எங்குப் பெற்றதோ?

துன்பமென்றது, பாட்டின்மேலெழுகின்ற காதற் றுன்பம். தன்கண் நிகழ்கின்ற ஏக்கத்தைப் பாட்டினியல்பாகக் கூறினார், அதனால் அது நிகழ்வதாகலின். இது காதன் மிகுதியால் அமையும் மெய்ப்பாடு. மறுதலைப்பட்ட இருதன்மை எங்கும் ஒரு பொருட் கின்மையின் 'யாண்டுப் பெற்றதோ' என்றார். இருப்பது போற் றோன்றுதற்குரிய காரணம் வருஞ் செய்யுளால் விளங்கும்.

5. பெற்றாளே பெற்றாள்
 பெருந்துன்பம் பேரின்பம்
 எற்றோ மலடிக் கிவை.

மகப் பெற்ற தாயே முதலிற் பெருந்துன்பமும் பின்னர்ப் பேரின்பமும் பெற்றாள்; மகப் பெறா மலடிக்கு இவை எத்தன்மையன?

இன்ப முண்டேல் துன்பமுண்டாகலின், பாவென்னும் மகவின் இன்பத்தின் பொருட்டு அதற்குக் காரணமாகிய துன்பமும் எட்டுதலின் இன்றியமையாமை விளக்கினார். எண்ணும்மை விரித்துக் கொள்க. ஒரு நுகர்வுங் கூடாத ஏழைமை கருதி 'எற்றோ

மலடிக்' கென இரங்கினர். எற்றோ இவையென ஒருமை யான் முடிந்தது; இரண்டன் இலையபினன்.

இச் செய்யுள் முற்றுவமை. இவை இரண்டு பாட்டானும் பாட்டின் இன்பப் பெருக்கிற்குக் காரணமாகிய பிணிப் பேக்கம் நுவலப்பட்டது.

6. பட்டால் படுதலால்
பாவென்ப பல்லோரும்;
தொட்டாலும்ஊறுஞ்சுவை.

உள்ளம்ஒருசுவையில் ஈடுபட்டால் பாட்டுத்தோன்றிப் பாத்தலின் பலரும் அதனைப் பரவுவதென்னுங் கருத்திற்'பா'வென்று பெயர் கூறுவர். அத்தகைய பாவினைத் தீண்டினும் சுவை ஊறும்.

நுகர்வுற்றூற் பாட்டுத் தோன்றுதலின், பட்டாற் பாபடும் என்றூர். படுதலாவது தோன்றுதல்; ஈண்டுத் தோன்றிப் பாத்தலென்க. என்றது தோன்றிக் கவர்ந்தோங்குதல்; பிற உணர்ச்சிகளைத் தன்வயமாக்கித் தான் ஒன்றே முழுமையாய்ப் பரந்து நிற்றல். 'பா' வென்பது பாத்தலெனப்படுமாகலின், பரவுமியல் ஈதெனப்பட்டது. சிறிதீடுபாட்டினுஞ் சுவையூறு மென்றற்குத் 'தொட்டாலும்' என்றூர். இனிப் 'பட்டாற் படுதலால்' என்பதற்குத் தொடர்பு பட்டால் தொடர்வாரைத் தானுந் தொடர்ந்து பரவுதலால் என்றுரைத்தலும் ஒன்று.

இதனாற் பாவென்னும் பெயர்க் காரணம் கூறினர்; மேல் வருவதும் அது.

7. கண்ணீர் பயந்து
கருத்தொளிரும் பாப் போன்று
கண்டார்க்கவர்வதொன்றில்.

தன்கண் ஈடுபட்டார்க்குக் கண்களில் உருக்க நீர் உண்டாக்கி அவர் நோக்குக்குக் கருத்துருவாய் மிளிரும் பாட்டொப்பக் கண்டாரைக் கவர்வதொன்று வேறு இல்லை.

வயமாக்கி என்றதற்குக் 'கண்ணீர் பயந்' தென்றூர். கண்டார் என்றது, கருத்தால் நோக்குவாரை; கருத்தளவாயெனவுமுரைத்து, இருபொருட் பேருக்கலும் அமையும்.

8 முழுக்குக்கோர் முத்தெடுப்
மூழ்கி மிதப்பர் [பர்
அழுவார் அருட்பாவுள்
[பட்டு.

அருட் பாட் டென்னுங் கடலிற்கலந்து முழுக்குத்தோறும் ஒரு முத்தொத்த கருத்தெடுப்பர்; அக் கருத்தழகில் அமிழ்ந்தித் திளைப்பர்; கரைந்துருகுவர்.

அருளியற்கையா னெழுந்த பாட்டெனற்கு 'அருட்பா' எனவும், தூய அழகிய உயர்ந்த கருத்தெனற்கு ஆகுபெயரான் முத்தெனவும் விதந்தார். ஓர் என்னும் எண் அருமை யுணர்த்திற்று; அருமையாய்ப் புதுப் புதுப் பொருளெடுப்ப ரென்றபடி. மிதத்தலும் அழுதலும் களிப்பும் உருக்கமுமாகிய மெய்ப் பாடு தோன்ற நின்றன.

9. பாநோக்கிப் பல்கால்
திளைக்கும் பயன்றருமோ
வானோர் வதியும் உலகு.

தேவருறையும் உலகம், பாட்டோடு கலந்து பலகாலும் நுகரும் விழுப்பம் பயக்குமோ?

கலத்தலாவது பாட்டின் கருத்தினிமையில் ஊன்றி அதன் கண் ஆழத் திளைத்தல்; பா ஆயுந்தொறும் சுவை பயத்தலின், 'பல்கா' லெனவும், புதுப் புதுச் சுவை பயத்தலின் 'வானோருலகு தருமோ' எனவுங் கூறினர். முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

இவை இரண்டு பாட்டானும் பாட்டின் சுவைபுதுமை மெய்ப் பாடு முதலியன கூறினர்.

10 மறக்க உளமுருக்கி
மாளாத பாவே
இறவாத இன்பப் பொருள்.

நிலை மறக்கும்படி உள்ளத்தை உருக்கித் தானொன்றேயாய் நிலைத்த பாட்டே, உலகத்தில் அழியாத பேரின்பப் பொருள்!

உருகி முதல் காணுதவாறு செய்தலை 'உருக்கி' என்றூர். மறத்தலாவது யான் எனதென்னும் இருவகை முனைப்பையும் இழத்தல். 'மாளாத' என்றதற்கு மேலும் 'இறவாத' என்றூர், என்றும் அழியாமை தேற்றுதற்கு.

இதனால் பாட்டின் அழிவின்மை நுவலப்பட்டது.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பணமுதலியார்ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு, சென்னை 1.

# "வள்ளுவன் புகன்ற வாய்மைகள்"

(முன் தொடர்ச்சி)

அதற்கடுத்து, சினத்தையும் அடக்கல் வேண்டும். அச் சினமாவது மனிதனின் மாண்பையும், மதிப்பையும் ஆண்மையையும் அறத்தையும் அறிவையும் பரிவையும் அறுத்து விடுகின்றது.

மனிதன் தன்னைத் தான் இவ்வுலகத் துன்பத்தினின்றும் விடுவித்துக் காத்துக் கொள்ள விரும்புவானேயாயின் அதற்கு இடையூறுயுள்ள தீய செயல்கள் பலவற்றில் ஒன்றான "சினத்"தையும் அடக்கியொடுக்கி அழித்தல் வேண்டும். அவ் வெகுளியே அவனுக்கு ஒறுக்கும்படியான துன்பத்தைக் கொடுத்து வாழ்வைக் கெடுத்துவிடுமாம்.

இச் சிறந்த கருத்தைப் புலப்படுத்தும் சீரிட குறளின் சிறப்பைக் காண்போம்..

'தன்னைத்தான் காக்கின் சினங்
காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ்சினம்"

உதாரணமாக ஒருவன் தன் மனைவி ஏதோவொரு குற்றஞ் செய்துவிட்டதற்காக வெறுப்புக் கொண்டு மனத்தின் சினத்தைப் பெருக்கி "இனத்தாள்" என்பதை மறந்து தண்டிக்க எண்ணிச் செய்வதறியாது கத்தியை வீசி எறிந்தான்.

அது அவள் மலரனைய கையில் பட்டுக் குருதியைக் கசியச் செய்தது. அவள் கையில் குருதி கசியக் கசிய இவன் உள்ளமும் கசிந்தது—கலங்கினான். மங்கையின் கைவிரல் தறித்தது கண்டான் – நெகிழ்ந்தான் – மனம் நொந்தான், சினத்தீயின் காரணமாக அகமுடைந்த வெந்தான்.

மாளிகை மீதில் மகோன்னதமாய் வாழ்ந்த மன்னர்களும் சீரும் சிறப்பும் பெற்றுச் சிங்காரமாய் வாழ்ந்த செல்வர்களும் இச்சினத்தாற் சீரழிந்தனர். இச் சினத்தின் தன்மையை விவேக சிந்தாமணியிலுள்ள பாடலொன்று விளக்குகின்றது.

"வெகுளியே யுயிர்க் கெலாம்
விளைக்குந் தீவினை
வெகுளியே குணந் தவ விரத
மாய்க்குமால்
வெகுளியே அறிவினைச் சிதைக்கும்
வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை
வேறொன் றில்லையால்"

ஆகவே மனிதன் சீரும் நிலமும், செல்வமும், செழுமையும் பெற்று வாழ்ந்த போதிலும் அவர்கள் அகத்துறவு பெற்று– இன்பம் அநுபவிக்க இடையூறாய் நிற்கும் தீய செயல்கள் பலவற்றில் சினமும் ஒன்றாம்.

எனவே மனிதன் தன்பால் எழாநின்ற அத் தீய சினத்தைத் தடுத்து நிறுத்திக் கொள்வானேயாயின் அதனால் வருகின்ற துன்பத்தை அவன் அடையாது வாழலாம். அதற்கடுத்தபடி;

அவாவுறுதலும் மனிதனின் உள்ள உறுதிக்கும், எண்ண எழுச்சிக்கும் அழிவைத் தருகின்றது.

'ஒருவன் அவாவுக்கு அஞ்சி வாழ்வதே அறம். ஏனெனில், ஒருவனைச் சோர்வுக்குட்படுத்திக் கெடுத்து வஞ்சிப்பது அவாவே' இக் கருத்தை,

"அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா"

எனும் எழில் "குறள்" எடுத்தியம்புகின்றது. இந்த அவாவினால் மனிதன் அறிவிழந்து, ஆண்மை யிழக்கின்றான்.

உதாரணமாக ஒருவன் திருவிழாவை முன்னிட்டு வேற்றூர் செல்ல வேண்டுமென எண்ணி, எண்ணியதொடு நில்லாது அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு விழா நடக்கும் ஊரையும் அங்கு நாம் என்னென்ன காட்சிகளை இடங்களைக் காண வேண்டும் என்பது பற்றியும் நினைந்து நினைந்து நெஞ்சில் ஆசையை வளர்த்துக் கொள்ளுகின்றான்.

பிறகு விழாவிற்குச் செல்ல வேண்டிய நாளில் ஏதோ அசந்தர்ப்பமாகத் "தடை" நேர்ந்து விட்டது. அதனை அறிந்த அவன் வேதனையை என்னென்றியம்புவது விழாவிற்குப் போக வேண்டும் என்று எண்ணிய எண்ணத்தோடு நின்றால் இத் "தடைக்"கு அத்தனை வருத்தம் ஏற்பட்டிராது. விழாவைப்பற்றி நினைந்து ஆசையைப் பெருக்கிக் கொண்டதால் அத் "தடை" அவனுக்குத் தளர்ச்சியை யுண்டு பண்ணி விட்டது; வேதனைப்படுகிறான்; ஏங்கி, ஏங்கி, ஏமாற்றமுறுகின்றான். மற்ற, மற்ற ஆகவேண்டிய நற்காரியங்களிலும் எண்ணத்தைச் செலுத்தாது மேன் மேலும் துன்பப் பட்டுழலுகின்றான். இதனை மற்றுமொரு குறளும் உறுதிப் படுத்துகின்றது.

"அவா இல்லார்க் கில்லாகும் துன்பம்
அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்"

எனவே மனிதன் பிற எவற்றிலும் மிக்க ஆசை கொள்ளாதிருப்பின் அவ்வாசையினால் உண்டாகின்ற துன்பத்தினின்றும் விடுபடலாம்.

கடைசியாகக் களவு பெறுதலினால் ஏற்படுகின்ற இன்னல் எத்தகையது என்பதைக் காண்போம்.

பிறர் பொருளைக் களவு செய்து கொள்ளுதலில் ஒருவனுக்குள்ள விருப்பமானது பயன் விளையும்போது மிகுந்த துயரை உண்டுபண்ணும்.

உதாரணமாக நடுத்தர நிலைமையுள்ள வொருவன பிறனிடம் காணும் மிகுந்த பொருளைத் தானும் அடைய விரும்பி அக் கள்ள விருப்பம் பூர்த்தியாமாறு திருடுதல் செய்கின்றான்.

உடனே அவனைப் போலிசார் பிடித்துத் தக்கவாறு தண்டித்துச் சிறை புகுத்துகின்றனர்; அந்த அவன் எண்ணுகின்றான்: 'மற்றவன் பொருளைக் கவர வேண்டுமென விரும்பிய தீய விருப்பந் தான் இப்போது நமக்கு இருந்த நிலையினும் இழிந்த நிலை தந்து விட்டது' என்று.

ஆகவே மனிதன் பிறன் பொருளைக் களவாட விரும்பானேயானால் அக் களவினால் வருகின்ற இழிவிலிருந்து தப்பி நெடுங்காலம் இன்பம் பெற்றுய்யலாம்.

வள்ளுவன் இச் சீரிய கருத்தைக் குறட்பாவில் கூறியவாறு காண்போம்.

"களவின்கண் கன்றிய காதல்
விளைவின்கண்
வீயா விழுமந் தரும்"

எனவே இதுகாறும் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் குறட்பா வடிவிலே வள்ளுவர் வகுத்துத் தந்துள்ளார், மனிதனது வாழ்வில் துன்பமின்றி இன்பம் பெற்றுய்யுமாறு.

ஆகவே நாம் இவ்வரிய கருத்துக்களைப் படித்து அறிந்து, அதனை நமது வாழ்க்கையிலும் மேற்கொண்டொழுகித் தீங்கற்ற எழில் கிடைக்க இன்பம் பெற்று இல்லறத்தை நல்லறமாக இனிது என்றும் நடத்துவோமாக!

'நா'

# பணித் துறை

## * நாடு முன்னேற......? *

(முன் தொடர்ச்சி)

இவ்விரண்டுமே இல்லையென்றால் நிச்சயம் அவர் எல்லாருடைய நலத்தையும் நாடுபவராகத்தான் இருக்க முடியும்.

எல்லாருக்கும் இருக்கும் வசதியைச் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றால் ஏர் உழுபவன் தலையில் கிரீடத்தைப் புதைத்து, பீதாம்பரம் உடுத்து மெத்தையில் உட்கார வைப்பதல்லவே? அவ்விதம் செய்வது அவனுக்கே பிடிக்காது. மேலும் அவ்விதம் செய்தால் அவன் உழைக்காமல் சோம்பேறியாகிவிடுவான். அவ்வாறு உழைப்பாளனை, கடமையைச் செய்பவனைச் சோம்பேறியாக்கும் எந்த ஒரு தூண்டலும் இந்த நாட்டிலிருந்து பெயர்த்தெறிய வேண்டுவதாகும். இதன் தாத்பரிய மென்னவெனின், இடம், தொழில், காலம், வசதி இவைகளை அனுசரித்து நடந்து கொண்டால் எந்த நாடும் மேனிலையடையும் என்பதில் ஐயமில்லை.

எந்த நாடு முன்னேற ஆர்வங் கொண்டுள்ளதோ, அந்த நாடு அதிலடங்கிய மக்களின் தகுதியையும் திறமையையும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். யார் யார் எந்தெந்தத் துறையில் ஆர்வங் காட்டுகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்புத் தந்து உதவவேண்டும். இதை அரசாங்கம் செய்யவில்லையென்றால் அதன் முன்னேற்றம் வெறும் கனவுதான். தலைப்பில் கூறியதுபோல், அரசாங்கம் போகிற போக்கிலே தானும் அதற்கு ஒத்துழைப்பதுபோல் பாவித்து, திரைமறைவில் தன்னைச் சேர்ந்தார் நலத்தையே கருதிப் பாடுபடும் இந்த முடக்குவாதக் கைகளை நிலையாக நிமிர்த்தி விட்டால்தான் வழுக்கு மரத்தில் ஏற முடியும். இந்த முடக்குவாதங்கட்கு இடம் கொடுப்பதால் சூழ்ச்சிகளும், வஞ்சகம், பொய், பேராசை முதலிய தீய பண்புகளும் நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். பத்திரிகைத் துறை பொதுவானது. மொழி எங்ஙனம் எல்லார்க்கும் பொதுவோ அங்ஙனமே பத்திரிகைகளும் பொதுவாக இருக்கவேண்டும். எம்மொழியாயினும் அம்மொழியில் வரும் பத்திரிகைகள் அவ்வாறே பொதுவாக இருக்கவேண்டும். இதைச் சில போலிப் பொதுநல வாதிகள் தாமே முன்னேற வேண்டும் என்ற சுயநலத்தால் தம்மைச் சேர்ந்தவரையே அதில்

நுழைத்துக்கொண்டு விடுவது நாட்டுக்குக் கெடுதியை உண்டாக்குவதல்லவா? அப்படியே இழுத்துக்கொள்ளட்டும். அவருக்கு ஏதோ சில நலன்கள் தேவை. அதனால் பாதகமில்லை. ஏனெனில் அப்படி இழுத்துக் கொள்ளப்படுபவர் திறமைசாலியாய், நல்ல அறிவு படைத்தவராய் இருந்தால் ஒத்துக்கொள்ளக் கூடியதே? நாட்டுக்கு நன்மை அவரால் உண்டாகுமென்றால், வேண்டியதுதானே? அந்தமட்டில் போதுமானது. ஆனால் அப்படி இழுத்துப் போட்டுக் கொள்பவரின் அறிவு, திறமை, அனுபவம், தகுதி இவற்றை விடப் பன்மடங்கு, உயர்வாகப் பெற்று நாட்டின் நலத்தில் பெரிதும் முனைந்து உழைக்கக் கூடிய ஒருவர் திரைமறைவில் உண்டென்றால் அவரைச் சும்மா விடுவதால் முன்னேற்றம் எவ்வளவு தடைபடுகிறது. இவர்களையெல்லாம் கழித்துவிட்டுத் தாம் விரும்பியபடியே நடக்கும் ஒரு சில சுய நலக்காரர்களால் தான் நாடு முன்னேறுவதற்கு வேண்டிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை?

இவர்கள் போன்ற சுயநல வாதிகள் நாட்டின் முன்னேற்றத்துக்கான பல துறைகளிலும் புகுந்து அந்தந்தத் துறையில் அறிவற்றவர்களை இழுத்துப் போட்டுக்கொண்டு, அறிவுள்ளவர்களை ஒதுங்கித் தள்ளிவிடுவதால் நாடு துன்பத்தை அனுபவிப்பதோடு நில்லாமல், சமாதானம் உலகத்திலிருந்தே பறந்துவிடுகிறதல்லவா? அப்படி உண்மையிலேயே ஒரு துறையில் அனுபவமுள்ள ஒருவர், தாம் அத்துறையிலுள்ள சில சுயநல வாதிகளால் வஞ்சிக்கப்பட்டோம் என்பதைக் கண்டித்துப் பொது மக்களுக்கு அறிவிக்க முற்பட்டார்களானால் அவர்களை வைரி என்று ஏசுவது எத்தகைய அநீதி! இதற்கு நீதி வழங்கும் பொறுப்பை ஆட்சி நடத்துவோர் ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். அந்தச் சுயநல வர்க்கமே ஆளும் பொறுப்புக்கு வந்துவிட்டால் நாட்டின் கதியென்ன? உண்மையிலேயே நாடு நாடாக இருக்குமா என்பது சந்தேகந்தான். உண்மை அறிவாளர் உலர்வர். துயர் படுவர்.

மொழியினால்தான் மனித வாழ்வு மேம்பாடடையும். அந்தப் பொதுச் சொத்தை நாட்டுக்கென்றே பயன்படுத்த வேண்டுமேயல்லாது, தத்தம் சுயநலத்துக்கென்றே பயன்படுத்துவாராயின் இதைவிட நாட்டுக்கு அவர் செய்யும் துரோகம் வேறெதுவும் இருக்கமுடியாது. இப்படியே உலக மனைத்தும் இயங்குமாயின் மனித வர்க்கமே பூண்டோடு அழியவேண்டுமல்லவா?

பத்திரிக்கையில் ஒருவர், தமக்குப் பிடித்த ஒருவரைச் சிறப்பித்துக் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அந்தச் சிறப்புடையவரின் எதிரி அவரைவிடப் பன்மடங்கு சிறப்புடையவரென்றால், அவரைப் பற்றி எழுத மறுக்கும் பத்திரிக்கை இருக்குமானால், அந்தப் பத்திரிக்கையை நாட்டிலே நடமாட விடும் அரசாங்கம் இருக்குமானால், உடனே அந்தப் பத்திராதிபரும், அரசாங்கப் பொறுப்பாளரும் தத்தம் பதவியை இழக்க வேண்டியவர்களன்றோ? ஏன்? முன்னேற்றத்தை விழையும் நாட்டுக்குத் தடை இவர்கள்.

எனவே நாடு முன்னேற அந்த நாட்டில் தகுதி, திறமை, அனுபவம் இவைகளிற் சிறந்தவர்களைத் தேடிப் பிடித்து, ஆளும் கடனை அவரிடம் ஒப்புவித்தல் வேண்டும். இப்படிச் செய்வோமானால் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைய முற்படமாட்டோமல்லவா?

நாராயணசாமி.

# செல்வி

## அத்தியாயம் 4.

(முன் தொடர்ச்சி)

வாங்க! அக்கா உடம்பு எப்படியிருக்கிறது? செல்வியை அழைத்துண்டு ஏன் வரவில்லை? எல்லாரும் எப்படியிருக்கிறார்கள், பணம் பைசல் பண்ணிவிட்டீர்களா? என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கினாள் சுசீலா.

கந்தசாமி முதலியின் நிலைகள் யாவற்றையும் எடுத்துக்கூறி, தான் பணத்தோடு மறுபடியும் ஊருக்குச் சென்று அவர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்றான், தினகரன்.

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது வேலைக்காரி கனகம்மாள் வந்து நாம் பார்த்த புது வீட்டைப் பற்றிச் சொன்னீர்களா என்று சுசீலாவை நோக்கிக் கேட்டாள்.

என்ன! புது வீடா! பார்த்தீர்களா! என்ன விஷயம்? என்று கேட்டார் தினகரன்.

ஆமாம், கீழ்ப்பாக்கத்திலே புது வீடு ஒண்ணு ஒரு மிராசுதார் கட்டியிருக்கிறார். அந்த

வீடு மிக அழகாக உள்ளது. தற்காலத்தில் புது மாதிரியை அப்படியே அதில் அமைந்திருக்கிறார். அந்த வீட்டைச் சுற்றி அழகாகப் பூஞ் செடிகள் உள்ளன. சமையல் அறை, குளிக்க அறை, மின்சார விளக்கு, சாமான் வைக்க அறை, வெளியிலிருந்து வருபவர்களைப் பார்க்க வீட்டுக்கு முன்னாலே ஒரு ஹால், படிக்க எழுத ஒரு அறை, படுக்கை முறை முதலிய பல அறைகளுடன் அந்த வீடு கட்டப்பட்டிருக்கிறது. கார் விட ஒரு கார் ஷெட் கூட இருக்கிறது. ஒவ்வொரு இடமும் பார்க்கக் கண்ணைப் பறிக்கிறது. வீட்டில் 4.5 குழாய்கள் கூட உள்ளன. அவ்வளவு அழகாக உள்ளது, என்றாள் சுசிலா.

அப்பொழுது அதன் விலை அதிகமாயிருக்குமே, பணம் எவ்வளவு என்று விசாரித்தாயா என்றார் தினகரன்.

ஓ விசாரித்தேன், அதன் விலை, வீடு மனையுட்பட $1\frac{1}{4}$ லக்ஷமாம், நாம் குறைத்துக் கேட்டால் 1 லக்ஷத்தில் முடிந்து விடும். அதை நாம் இன்று மாலை போய்ப் பார்த்து விட்டு வரலாமா என்றாள் சுசிலா.

அப்படியே போய்ப் பார்க்கலாம். அண்ணா, அண்ணி, செல்வி இவர்கள் எல்லாரும் வந்தால் வீடு தேவையாகத்தானே இருக்கும். நாம் அவசியம் போய்ப் பார்த்து முடித்து வரலாம். நாளை சனிக்கிழமை. ஏதோ ஒரு கவர்ன்மெண்டு விடு முறையாம். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. திங்கட்கிழமை தான் பாங்குக்குச் சென்று செக் மாற்றிக் கொண்டு வர வேண்டும். நாளையோடு இந்த மாதம் முடிந்து போகிறது. செவ்வாயன்றுதான ஊருக்குச் சென்று வர முடியும் போல உள்ளது, என்றார் தினகரன்.

இதற்குள்ளாக வேலைக்காரி கனகம்மாள் சாப்பிட அழைக்கவே சாப்பாட்டிற்குச் செல்லலானார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் சின்னதம்பியின் வீட்டிற்குப் போன் கொடுத்துக் காருடன் வரச் சொன்னார்கள். சிறிது நேரம் தினகரன் உறங்கினார்.

சரியாக மணி டாண் டாண் என மூன்று அடித்தது. காரும் வந்து நின்றது காரிலே வேலைக்காரியுடன் எல்லாருமாகச் சேர்ந்து அந்தப் பங்களாவைப் பார்க்கச் சென்றார்கள்.

பங்களாவைப் பார்த்தார்கள். பங்களாவை விட்டு வரக் கூட மனம் வரவில்லை தினகரனுக்கு. அவ்வளவு ஆசை விழுந்து விட்டது அந்த பங்களாவின் மேல் தினகரனுக்கு. ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்கிறார் ஒரு பெருந்தகையாளர். ஆனால் அந்தப் பங்களாவிலே அப்படியே இருந்து விடலாமா என்று கூட அவருக்குத் தோன்றியது. ஆசைப் படப்படத் துன்பம் தான் ஏற்படுமேயொழிய இன்பம் ஏற்படாதென்றே அப்பெருந்தகையாளர் கூறினார். ஈசனிடத்தில் ஆசை வைத்தாலும் கூடத் துன்பம் ஏற்படும். துன்பம் மிகக் கடினமானதாயிற்றே. ஏன், அதை இந்த ஆசை பட்டு அடைய வேண்டும் என்பதுதான் அப்பெருந்தகையாளரின் கருத்து. பிறவிப் பெருங்கடலை அறுக்கும் ஈசனிடம் அன்பு வைத்தாலே துன்பம் என்றால், சாதாரண எளியவற்றிற்கு ஆசைப்பட்டால் ஏற்படக்கூடிய துன்பம் சிறிதளவாக இருக்குமா? பெரிதாக அன்றோ இருக்கும்! எனவேதான் அப்பெருந்தகையாளர் அவ்வாறு கூறினார். நிற்க.

ஆசைப் பட்டார். அதோடு நிற்கவில்லை. உடனே வாங்கவும் எண்ணம் கொண்டார். தான் திங்கட்கிழமை வாங்கிவிடுவதாகவும், அன்று $1\frac{1}{2}$ லக்ஷத்தில் கிரயம் எழுதித் தருமாறும் பலவாறு பேசி ஒருவாறு அந்தத் தொகைக்கு முடிவுகட்டிப் புறப்பட்டு விட்டார்கள்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நற்கடமைகளைச் செய்யாமல், சும்மா இருப்பதனாலும், தேவைகளை வேண்டுவதனாலும், தீமைக்குத் தீமை என்று தீமைகளையே பெருக்குவதனாலும் பாவங்கள் போகமாட்டா. பின்னும் பெருகும்.

இனி, நற்செயல்கள் செய்வதற்கு, நன்மொழிகளை இனிமையாகப் பேசத் தெரிந்திருப்பது முக்கியம்! ஒருவர் செயலாளர் என்பதற்கு அவர் சொல்லே முதல் எடுத்துக்காட்டு!

பலர்க்கும் நன்மை தரத்தக்க நற்கருத்துக்களால் ஆன சொற்கள் சொல்லத் தெரிந்துகொள்ளுதலும், அவற்றை இனிமையாகச் சொல்லத் தெரிந்து கொள்ளுதலும் செய்கைக்கு உதவியாயிருக்கும். இச் சொல் நலம் உடையவர்க்கு அறம் என்னும் புண்ணியம் பெருகிவருகின்றது. வரவே, இதன் வலிமைக்கு ஆற்றாமல் மறம் என்னும் பாவம் தன் வலி சுருங்கி அழிந்து விடுகின்றது.

நல்லவை நாடி இனிய சொல்லுதலில் எவ்வளவு பெரும் பயன் இருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)